# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1788/29 - 2012 දෙසැම්බර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.12.13

*1788/29 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 104/44*

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

“றேய் விஜெயவர்த்தன தரும நம்பிக்கைப் பொறுப்பு” நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், அதாவது -

1. அனோமா விஜெயவர்த்தன,
2. றோஷினி குணரத்ன,
3. அமந்த முதன்நாயக்க,
4. பேராசிரியர் மலிக் ரணசிங்க,
5. சுனேத்திரா பண்டாரநாயக்கா,
6. விஜய மலலசேகர,
7. நாலக குணவர்த்தன,
8. லக்ஸ்மன் நுகவெல,
9. பொன்னுகொனே ஜினிசியஸ் யோசப் மற்றும்
10. நிகால் ஜெயமானே

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 114ஆம் பிரிவின்கீழ், நீதி அமைச்சருக்கு அவர்களது கூட்டிணைப்புக்கென விண்ணப்பித்துள்ளார்களாதலால்,

ஆகவே, இப்போது, மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர், ரவுப் ஹகீம் ஆகிய நான், இக்கட்டளைமூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்யுமாறும் பணித்து வெளிப்படுத்துகின்றேன்:-

(அ) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு விதிகளின்கீழும் அத்துடன் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டீயென் லீ டீ சேரத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதிய 2505 ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகையின்கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களது பின்னுறுவோரும் “றேய் விஜெயவர்த்தன தரும நம்பிக்கை பொறுப்பு” என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும்;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயர்மகுடத்தின்கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் ஏதேனும் விவரணத்தினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம்,

பெற்றுக்கொள்ளலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடமானம் வைக்கலாம், குத்தகைக்கு விடலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும்; அத்துடன்

(இ) நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பில் எழும் எல்லா வழக்குகளிலும் வழக்கெழு காரணங்களிலும் சொல்லப்பட்ட பெயர்மகுடத்தைக் கொண்டு இலங்கையில் அல்லது வேறெங்காயினுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை பகர்வதற்கும், விடை பகரப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும், எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டப்படி இயலுமானவர்களும் தகுதியுடையவர்களுமாதலும் வேண்டும்.

இக்கட்டளை எனக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

ரவுப் ஹகீம்,
நீதி அமைச்சர்.

கொழும்பு
*2012, திசெம்பர் 06.*

*12-841*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.